தரம் 10	தி / கிண் / அல் - அஹ்லா வித்தியாலயம் T / KIN / AL – AHLA VIDYALAYA	புள்ளி
புவியியல்	முதலாம் தவணைப் பரீட்சை - 2020	பகுதி I
சுட்டெண்:	நேரம் : இரண்டு மணித்தியாலம்	

✷ **1 – 10 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான விடையினை தெரிந்து அடைவெளியில் எழுதுக.**

01. வெப்ப நழுவுவீதம் இடம்பெறும் வளிமண்டல படை ..... ஆகும் (படை மண்டலம், மாறன் மண்டலம், இடைம ண்டலம்)

02. புவி மேற்பரப்பு ..... சதுர கிலோமிற்றர்களாகும். (510, 500, 516)

03. ஓசோன் படை ..... படையில் அமைந்துள்ளது. (இடைமண்டல, படை மண்டல, மாறன்மண்டல)

04. சமுத்திர தகடுகளில் ஒன்றாக ..... காணப்படுகிறது. (பசுபிக் தகடு, நெந்தாட்டிக் தகடு, ஆபிரிக்க தகடு)

05. மொஹோரோவிச் கோடு அமைந்திருப்பது ..... (புவியோட்டுக்கும் கோளவகத்தகட்டுக்குமிடையே, புவியோட்டுக்கும் இடையோட்டுக்குமிடையே, இடையோட்டுக்கும் கோளவகத் தகட்டுக்குமிடையே)

06. வெளிக்கோளத்தில் திரவநிலையில் காணப்படக்கூடிய உலோகம் ..... ஆகும். (மக்னீசியம், டல்வின், இரும்பு)

07. ஆசியாக் கண்டத்தையும், ஐரோப்பா கண்டத்தையும் பிரிக்கின்ற மலைத்தொடர் ..... ஆகும். (அந்தீஸ், இமையமலை, யூரல்)

08. அவுஸ்திரேலிய கண்ட ஓட்டினுள் அமைந்திருக்கும் தீவாக ..... காணப்படுகின்றது. (ஜாவா, மடகஸ்கார், தஸ்மேனியா)

09. உலகின் மிக ஆழமான சமுத்திர அகழி ..... ஆகும். (வின்டநான்ட் அகழி, மரியானா அகழி, ஜாவா அகழி)

10. நுலாபார் சமவெளி அமைந்திருப்பது ..... ஆகும். (ஆபிரிக்க கண்டத்தில், அவுஸ்திரேலிய கண்டத்தில், தென்னமெரிக்க கண்டத்தில்)

✷ **11 – 20 வரையுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து அவை சரியாயின் "சரி" ஐயும், பிழையாயின் "பிழை" ஐயும் சுற்றி வட்டமிடுக.**

11. தற்போது மியன்மார் என அழைக்கப்படும் நாடு பர்மாவாகும் சரி / பிழை

12. உலகின் மிகஉயரத்தில் அமைந்திருக்கும் மேட்டுநிலமாக தக்கனமேட்டுநிலம் காணப்படுகிறது சரி / பிழை

13. புவியின் கட்டமைப்பிலே மேற்பரப்பில் காணப்படுவது இடையோடு ஆகும் சரி / பிழை

www.ikdu.lk

14. றைன் நதியானது பனிக்கட்டி உருகிய நீரிலேயே உருவாகின்றது. சரி / பிழை

15. புவியின் மத்திய கோட்டில் இருந்து வடக்கே $231/2^{o}$ பாகையில் அமைந்திருக்கும் கோடு மரக கோடு ஆகும் சரி / பிழை

16. படை மண்டலத்தில் தரையுயர்ச்சிக்கேற்ப வெப்பநிலை அதிகரித்துச் செல்லும் சரி / பிழை

17. மூடியினுள் இடம்பெறும் அகவிசை தொழிற்பாடுகள் காரணமாக தகடுகளட அசையும் சரி / பிழை

18. உயிரக்கோளத்தில் தாவரங்கள் - விலங்குகளிடையே இணை தொடர்பு காணப்படுகிறது சரி / பிழை

19. கடலுடன் இணையும் உள்நாட்டுக் கடலுக்கு உதாரணம் அராபிய கடலாகும் சரி / பிழை

20. கண்ட ஓட்டில் அதிகமாக காணப்படும் பாறை கருங்கற்பாறையாகும். சரி / பிழை

✷ **21 – 30 வரையான வனாக்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.**

21. வளிமண்டலத்தினுள் மேல் செல்லும் ஒவ்வொரு 100m களுக்கும் $0.64^{o}C$ வெப்பநிலை குறைந்து செல்வது ..... என அழைக்கப்படும்.

22. கடலினால் சூழப்பட்ட சிறிய நிலப்பரப்பு ..... என அழைக்கப்படும்.

23. வளிமண்டல ஈரப்பதன் ..... என அழைக்கப்படும்.

24. கண்ட விளிம்பில் இருந்து சமுத்திர பகுதியில் காணப்படும் ஆழமற்ற கடற்பகுதி ..... எனப்படும்.

25. இலங்கையின் தேயிலை ஆராய்ச்சி நிலையம் ..... அமைந்துள்ளது.

26. இடையோட்டையும் கோளவகத்தையும் வேறுபடுத்தும் எல்லை ..... ஆகும்.

27. கண்ட ஓட்டு விளிம்பிலிருந்து சமுத்திர பகுதியில் ஏற்படும் சரிவு ..... என அழைக்கப்படும்.

28. ஆழமான சமுத்திரங்களில் எரிமலை செயற்பாடுகள் காரணமாக ..... தீவுகள் உருவாகின்றன.

29. முழுமையான தரையினால் சூழப்பட்ட பரந்த கடல்கள் ..... கடல்களாகும்.

30. புவிமேற்பரப்பில் வெவ்வேறு விதமாக காணக்கூடிய நீர் ..... நீராகும்.

www.lkedu.lk

✷ **31 – 40 வரையுள்ள வினாவில் தரப்பட்டுள்ள விடைகளுள் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31. சூரியமண்டலத்தில் சூரியனிலிருந்து புவி அமைந்திருப்பது
(1). இரண்டாவதாக (2). மூன்றாவதாக (3). நான்காவதாக (4). ஐந்தாவதாக

32. நீரியல் வட்டச் செயன்முறையின் போது மேலதிகமாக ஓடுகின்ற நீர்
(1). கழுவு நீரோட்டம் (2). பனிபடுநிலை (3). ஆவியாக்கம் (4). மழைநீர்

33. புவியின் மேற்பரப்பு நீரில் மனித செயற்பாடுகளுக்கு பயன்னடுத்தக்கூடிய நீரின் அளவு
(1). 1% (2). 2% (3). 2.5% (4). 1.8%

34. சமுத்திர ஓட்டில் அதிகமாக காணப்படும் பாறைவகை
(1). தீப்பாறை (2). பெசோல்ட்பாறை (3). கிரனயிட் பாறை (4). மாபிள் பாறை

35. மத்திய ஆசியாவிலே காணப்படும் மேட்டுநிலம் ஒன்று
(1). தக்கன மேட்டுநிலம் (2). திபெத் பீடபூமி
(3). மொங்கோலியன் மேட்டு நிலம் (4). பமீர் முடிச்சு

36. மத்திய மழைநாட்டில் சிறு ஊற்றாக ஆரம்பமாகும் நதி.
(1). தேம்ஸ் (2). நைல் (3). மகாவலி (4). ரைநன்

37. இடைவெப்ப வலயத்தில் அமைந்திருப்பது
(1). கடகக் கோட்டிலிருந்து மத்திய கோடு வரை
(2). மகரக் கோட்டிலிருந்து மத்திய கோடு வரை
(3). கடகக் கோட்டிலிருந்து ஆட்டிக் வரையிலும், அந்தாட்டிக் வட்டத்திலிருந்து மரகக் கோடு வரையிலும்
(4). ஆட்டிக், அந்தாட்டிக் வட்டம் மற்றும் வட முனைவு, தென் முனைவுகளுக்கிடையிலான பகுதி

38. உலக காலநிலை பாகுபாட்டில் முதன்மையான காலநிலையியலாளர்கள்
(1). டஸ்டின் மில்லர், அனெக்சிமான்டர், அல்பரட் உவெக்னர்
(2). தோன்வைட், அனெக்சிமான்டர், டஸ்டின் மில்லர்
(3). அல்பிரட் உவெக்னர், டஸ்டின் மில்லர், தோன்வைட்
(4). டஸ்டின் மில்லர், தோன்வைட், கொப்பன்

39. சீனாவின் துயரம் என அழைக்கப்படுவது.
(1). மிசிசிப்பி நதி (2). யாங்சிக்கியாங் நதி (3). சிக்கியாங் நதி (4). குவாங்கோ நதி

40. இலங்கையின் மிக உயரமான பரந்த மேட்டுநிலமாகக் காணப்படுவது.
(1). கண்டி மேட்டுநிலம் (2). ஹட்டன் மேட்டுநிலம்
(3). மஹவலதென்ன மேட்டு நிலம் (4). வெலிமட மேட்டுநிலம்

www.kedu.lk

தரம் 10	தி / கிண் / அல் - அஹ்லா வித்தியாலயம் T / KIN / AL – AHLA VIDYALAYA	புள்ளி
புவியியல்	முதலாம் தவணைப் பரீட்சை - 2020	பகுதி II
சுட்டெண்:	நேரம் : இரண்டு மணித்தியாலம்	

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1. (அ). பின்வரும் இடங்களை உலகப் புறவுருவப் படமொன்றில் குறித்துப் பெயரிடுக.
   (i). அமேசன் நதி (ii). கியுபா (iii). ஜப்பான் கடல்
   (iv). அப்பலாச்சியன் மலை (v). அயர் ஏரி
   (ஆ). பின்வரும் இடங்களை இலங்கைப் புறவுருப் படத்தில் குறித்துப் பெயரிடுக.
   (i). மன்னார் தீவு (ii). வளவ கங்கை (iii). சிங்கராஜ வனம்
   (iv). கேகாலை மாவட்டம் (v). அம்பாந்தோட்டை

2. (i). புவியின் பிரதான தொகுதி / கோளங்கள் நான்கிப் பெயரிடுக. (2 புள்ளிகள்)
   (ii). இவற்றுக்கிடையேயான இடைத் தொடர்புகளை சுரக்கமாக விளக்குக. (3 புள்ளிகள்)
   (iii). மனிதன் கற் கோளத்தைப் பயன்படுத்தும் போது அதற்கேற்படும் பாதிப்புக்கள் மூன்றினை உதாரணங்கள் மூலம் விளக்குக. (5 புள்ளிகள்)

3. (i). வளிமண்டலத்தின் பிரதான படைகள் நான்கினைப் பெரிடுக. (2 புள்ளிகள்)
   (ii). மாறன் மண்டலத்தின் விசேட பண்புகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)
   (iii). (a) வளிக் கோளத்தின் மூலம் மனிதன் பெறும் பயன்கள் மூன்று தருக.
   (b) வளி மாசடைதலை இழிவளவாக்கக் கூடிய முறைகள் இரண்டினை விளக்குக. (5 புள்ளிகள்)

4. (i). புவியில் நீர் காணப்படும் முறைகள் இரண்டினைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)
   (ii). நீர் மாசடைதலில் செல்வாக்குச் செலுத்தும் மனிதச் செயற்பாடுகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
   (iii). பிரதான செயற்பாடுகள் மூன்றின் மூலம் நீரியல் வட்டத்தை விளக்குக. (5 புள்ளிகள்)

5. (i). உலகின் பிரதான காலநிலை வலயங்கள் மூன்றினைப் பெயரிடுக (2 புள்ளிகள்)
   (ii). இலங்கை உள்ளடங்கும் காலநிலை வலயத்தின் விசேட பண்புகள் மூன்றினைத் தருக. (3 புள்ளிகள்)
   (iii). (a) காடழிப்புக்கான மனித செயற்பாடுகள் இரண்டு தருக.
   (b) வனப்பாதுகாப்பு தொடர்பாக நீங்கள் முன்வைக்கும் ஆலோசனைகள் மூன்று தருக. (5 புள்ளிகள்)

6. (i). உயிர்க்கோளம்என்றால் என்ன? (2 புள்ளிகள்)
   (ii). உயிர்க்கோலத்தின் எல்லைகள் மூன்றினையும் எழுதுக. (3 புள்ளிகள்)
   (iii). உயிரக்கோளத்தின் நிலைத்திருப்பில் மனிதனின் தலையீடு / செயற்பாடுகள் செல்வாக்குச் செலுத்தும் மூன்று விடயங்களை உதாரணங்கள் மூலம் விளக்குக. (5 புள்ளிகள்)

7. (i). புவி மேற்பரப்பில் காணக்கூடிய பௌதீக தரைத்தேற்ற அம்சங்கள் மூன்று தருக. (2 புள்ளிகள்)
   (ii). ஆசியாக் கண்டத் தகட்டினுள் அமைந்திருக்கும் ஒரு தீவு, அவுஸ்திரேலியாக் கண்டத் தகட்டிலிருக்கும் ஒரு தீவு, ஆபிரிக்கக் கண்டத்தகட்டிலிருக்கும் ஒரு தீவு என்பவற்றைப் பெயரிடுக. (3 புள்ளிகள்)
   (iii). சமுத்திரங்கள்,கடல்கள் என்பன மனிதனால் பயன் படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் மூன்றினை விளக்குக. (5 புள்ளிகள்)

www.ikedu.lk